'In the areas affected by adverse seasonal conditions or other natural calamities if representations are received for the grant of relief or concessions in repayment of loans that are due, the Collectors are requested to examine such representations immediately. In genuine cases of hardship, the Collector concerned shall grant such relief or concession as he considers necessary in accordance with the rules. In cases of representations on which he cannot pass orders, he would submit such representations to the Board of Revenue or the Government as the case may be with his recommendations thereon'.

எனவே இந்த ஆணையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சென்ற மாதம் நானே நேரில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், வருவாய்த் துறை அதிகாரியையும் சில பொது மக்களோடு சந்தித்து விவரத்தை எடுத்துச் சொன்னேன். அரசாங்கத்தின் ஆணையை என்னிடம் காட்டினர். இது போன்று அனுதாபச் செய்தி எதுவும் சொல்ல வில்லை. ஆகவே, இனிமேலாவது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் கேள்வியும், என்னுடைய பதிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிற நிலை ஏற்பட்டிருப்பதால், நான் படித்ததிலிருந்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்று கருதுகிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1973 நவம்பர் 26]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

6. மின்வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கடைசியாக இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் கள் பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்; அதை ஒட்டி நானும் பல கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.